**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 56. சுர தாஸ்**

---

டில்லியில் வாழ்ந்த மிக்க செல்வந்தர் இவர்.அக்பர் பாதுஷாவின் ”அரசவை நவரத்னங்கள்” எனப்படும் ஒன்பது முக்ய மந்த்ரிகளில் இவரும் ஒருவர்.

திவ்ய தேசங்களான மதுரா, வ்ருந்தாவன், கோகுலம் மற்றும் த்வாரகா பகுதிகளில் வரி வசூல் செய்து பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் தரமான நேர்மை மிக்க அதிகாரி ஒருவர் தேவை என்று மக்கள் கூறிய போது, பீர்பாலின் அறிவுரைக்கு ஏற்ப அக்பர் சுர தாஸரைத் தேர்ந்து எடுத்தார்.

மிகச் சிறிய வயது முதலே ஆழ்ந்த ஆன்மீக வழியில் வாழ்பவர் இவர்.தன் பணியை எண்ணி மகிழ்ந்து தன் குடும்பத்துடன் மதுராவில் தங்கி வேலைகளைச் செய்தார்.

திவ்ய தேசங்களுக்கு பாரதம் முழுதும் இருந்து வரும் யாத்ரீகர்கள் பல வசதிகள் இன்றித் தவிப்பதை அறிந்து, தன் செல்வத்திலிருந்து செலவு செய்து பல சத்திரங்களையும் உணவகங்களையும் ஏற்படுத்தினார்.கோயில்கள் பழுது பார்க்கப் பட்டன.முறையான ஆன்மீக-பக்தி நிகழ்ச்சிகள் ஏற்பாடு ஆகி நடந்தன.

காலம் உருண்டது.
சுர தாஸின் செல்வம் குன்றியது.பின்னர் வரிப்பணத்தில் இருந்து செலவு செய்தார்.மக்கள் மிகவும் மகிழ்ந்தனர்.செலவுக்கு ஏற்ற கணக்கை அவரும் முறையே எழுதிக் கொண்டு வருகிறார்.அவரது மனைவி அது சரியா என்று கேட்க, மன்னன் இதை எல்லாம் மதச் சார்பு இன்றி செய்து தான் ஆக வேண்டும் என்று கூறினார்.

இவரது புகழ் பொறாத பலர் அக்பருக்கு இவரது பணிகள் குறித்து எழுதினர்.மேலும் பல தவறான செய்திகளையும் உருவாக்கினர்.அக்பரின் வீரர்கள் இருவர் மதுராவிற்கு வந்தனர்.

”அக்பர் பாதுஷாவின் செல்வத்திற்கு உரிய கணக்கைக் காட்டுக ஐயா!” - வீரன்

***”தம்பீ! எது அக்பரின் பணம்? இவை மக்களின் பணம்! மேலும் இவை இறைவனின் பணம்! கவலை விடுக! இதோ வரிப்பணம் முழுக்க நவரத்தினக்கற்களாக வைத்து இருக்கிறேன். அதைக் கொண்டு செல்க.”*** - சுர தாஸ்

ஒரு பெரிய இரும்புப்பெட்டியை அவர்கள் யானை மீது ஏற்றிக் கொண்டு சென்றனர்.வழியில் அவற்றில் இருந்து திருட எண்ணிப் பெட்டியைத் திறந்த போது அவற்றில் வெறும் கூழாங்கற்கள் இருக்கத் திகைத்தனர்.சுர தாஸுக்கு உரிய தண்டனை உண்டு என எண்ணிப் பெட்டியை அக்பர் முன் வைத்தனர்.அக்பருக்கு உள்ளே வெறும் கற்கள் தான் இருப்பதாகக் கூறினர்.அக்பர் சுர தாஸின் மீது வைத்த மரியாதை

குறையாமல், ***"இல்லை, சுர தாஸ் இறை அன்பர்! அவர் ஏமாற்றவே மாட்டார்!"*** என்று கூறி அப்பெட்டியைத் திறக்க உள்ளே மிக்க விலை உயர்ந்த நவரத்தினங்கள் இருக்கக் கண்டார்.

இச்செய்தி சுர தாஸுக்கு வர, அவர் டில்லி வந்து உண்மையில் தான் கூழாங்கற்களையே அனுப்பியதாகக் கூறி இறைவனின் திவ்ய அன்பை அனைவருக்கும் காட்டினார்.அதன் பின் அவர் பதவியில் இருந்து விலகி மதுராவில் தங்கிக் கைங்கர்யம் பல செய்தார்.

ஹரி ஓம்!